# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

## மணமகள் தேவை 1996

| மணமகள் விபரம் | எதிர்பார்ப்பு |
|---|---|
| 1. வயது: 29<br>பிறந்த தேதி: 4-12-66<br>கல்விதகுதி: பிளஸ் டு | கிறிஸ்துவின் சபையை சார்ந்தவராக இருக்க வேண்டும். வேலை பார்ப்பவர் (or) சுவிசேஷ ஊழியர் |

தொடர்பு முகவரி
Bro. Simson GunaseKaran
20, A.P.Road 1st Lane
Choolai, Madras—600112.

| மணமகள் விபரம் | எதிர்பார்ப்பு |
|---|---|
| 2. வயது: 27<br>பிறந்ததேதி: 23-8-68<br>கல்வித்தகுதி:<br>Physio Theropy. | கிறிஸ்துவின் சபையை சார்ந்தவராக இருக்க வேண்டும். வேலை பார்ப்பவர்(or)<br>Business Person |

தொடர்பு முகவரி
Bor.S. Solomon Martin,
108/2 Augalamman Koil St,
Choolai Madras—600112.

கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்: 25-1-96

நீங்கள் அனுப்பிய பத்திரிக்கையும், புத்தகங்களும், கிடைத்தது மிக்க மகிழ்ச்சி. எங்களுடைய நூலகத்திற்கு மிகவும் பயனுள்ளதாயிருக்கும். தொடர்ந்து அனுப்புங்கள்.

நன்றி

இப்படிக்கு
M.S.ராஜா
கிறிஸ்துவின் சபை நற்செய்தி நூலகம்
மதுரை

# கிறிஸ்துவின் வசனம்

# WORD OF CHRIST

மலர் 4 பிப்ரவரி 1996 கனி 1


## கள்ளப் போதகர்கள்

### False Teachers

இன்றைய நாட்களில் கள்ளப்போதகர்கள் பெருகியிருப்பதை நாம் காண முடிகிறது. பரிசுத்த வேதாகமத்திலும் இவர்களைக் குறித்து வாசிக்கின்றோம், கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைக் கிரயத்துக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்து கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள்நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும் 11 பேதுரு 2:1 இச்செய்தியை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே இப்படிப்பட்ட போதகர்கள் உங்கள் நடுவிலும் இருப்பார்கள். இவர்களை நீங்கள் சீக்கிரம் அடையாளம் கண்டுகொண்டு இவர்களை விட்டு விலக சில வேதவசனங்களை உங்களுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறேன்.

இவர்களைக் குறித்து பவுல் 11 கொரி 11:13ல் அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே! தங்களை ரெவரெண்டு என்றும் அப்போஸ்தலர் என்றும் அழைக்க விரும்புகிறார்கள். நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து 12 அப்போஸ்தலர்களையல்லாமல் பவுல் ஒருவரைத் தவிர வேறொருவரையும் ஏற்படுத்தவில்லை. 1 கொரி 4:9ல் எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போல கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார் என்று பவுல் சொல்வதை வாசிக்கின்றோம் ஆகவே இவர்களுக்குப் பின்பு வேறே அப்போஸ்தலர்கள் எழும்பவில்லை. இவர்களே கடைசியானவர்கள் என்று இவ்வசனத்தின் மூலம் காண்கிறோம்.

---

உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. யாக் 4:4

இவர்களைக் குறித்து பவுல் 1தீமோ 4:1ல் ஆகிலும் ஆவியானவர் வெளிப்படையாய் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள். பிசாசின் உபதேசத்தைக் குறித்து உங்களுக்குத் தெரியாதா என்ன? ஏவாளைப் பார்த்து பிசாசு, நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாமென்று தேவன் சொன்னது உண்டோ என்றது. அதைப்போல் இந்த கள்ளப் போதகர்களும் சபை ஆராதனையில் வாத்தியக் கருவிகள் இசைக்கக் கூடாது என்று தேவன் எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா? இல்லையே! தாவீது நடனத்தோடும், கைத்தாளத்தோடும் சுரமண்டலத்தோடும், தம்புரோடும் துதித்துப் பாடினாரே என்று விளக்கம் கொடுப்பார்கள். அதே தாவீது பலிசெலுத்தினார். அவரைப் போல் இவர்கள் ஏன் பலி செலுத்துவதில்லை? பிரியமானவர்களே! தாவீது நியாயப்பிரமாண காலத்தின் கீழ் வாழ்ந்தார். ஆனால் நாமோ கிறிஸ்துவின் காலத்தில் அவருடைய உபதேசத்தின் கீழ் வாழ்கின்றோம். நமக்கு மாதிரியாக இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஸ்தோத்திரப் பாட்டை பாடி தேவனை ஆராதித்தார்கள் ஆகவே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நாம் யோவா 4:24ன் படி ஆவிக்குரிய ஆராதனை செய்ய வேண்டும்.

இவர்களைக் குறித்து பவுல் 1 தீமோ 1:7 ல் தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால் பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் வித்தியாசம் தெரியாதவர்களாயிருக்கிறார்கள். விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது. இப்பொழுதோ ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று என்று ஆண்டவர் சொல்கிறார்.

---

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1தெச 5:21

இதைப்புரிந்து கொள்ளத்தெரியாத அநேக ஸ்தாபனங்களில், பிரிவினை சபைகளில் பணியாற்றும் போதகர்கள் மனிதத் தலைவர்களைப் பின்பற்றி கள்ளப் போதகர்களாக மாறிவிடுகின்றனர். கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்குண்டான சுயாதீனத்தை உளவு பார்த்து நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாகும் பொருட்டாக பக்கவழியாய் நுழைந்த கள்ள சகோதரர்களிமித்தம் அப்படியாயிற்று கலா 2:4ல் வாசிக்கின்றோம். புதியதையும் பழையதையும் இணைக்கிறார்கள். ஓய்வு நாளாகி சனிக்கிழமையை இன்றைக்கு ஆராதனை நாளாக வைத்து ஆராதிக்கிறார்கள். முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது. நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாயிருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே-கலா 3:24-25. புளிப்புள்ள கொஞ்சம் மாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும் நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. உங்களை கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று பவுல் 1கொரி 4:6ல் சொல்வதை வாசிக்கின்றோம்.

பிரியமானவர்களே! கள்ளப் போதகர்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் அநேக இடங்களில் எச்சரிக்கிறது. இவர்கள் வயிற்றுக்காக ஊழியம் செய்கிறவர்கள். சுவிசேஷ வேலையை ஆதாயத் தொழில் என்று எண்ணுகிறவர்கள். பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்ப்பவர்கள். ஆட்டுத் தோலை போர்த்திக் கொண்ட ஓநாய்கள். வேதப்புரட்டர்கள். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிப்பவர்கள். பண்டிகைகளை ஆசரிப்பவர்கள் இப்படிப்பட்டவர்களை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளாமலும் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். 11 கொரி 3:6ன் படி புது உடன்படிக்கையின் (புதிய எற்பாடு) ஊழியக்கார

---

தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் மாற் 8:34

ராயிக்கும்படி அவரே எங்களை தகுதியுள்ளவர்களாக்கினார் கள்ளப் போதகர்களிடமிருந்து கர்த்தர் உங்களை விடுவித்துக் காப்பாராக! ஆமென்

★ சபைச் செய்திகள்

1. ஜனவரி 1ம் தேதி வத்தலக்குண்டைச் சேர்ந்த சகோ. பாண்டியராஜன் என்ற வாலிபர் கிறிஸ்துவுக்குக் கீழ் படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்.

2. ஜனவரி 2ம் தேதி கேரளா பகுதியைச் சேர்ந்த சகோ. சிம்சோன் அவர்கள் சத்தியத்திற்க்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்.

இவர்கள் இருவரையும் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை ஊழியர் வழிநடத்தினார்.

3. ஜனவரி 26ம் தேதி ஒரு நாள் வேத கருத்தரங்கு பாண்டிச்சேரி கிறிஸ்துவின் சபை சார்பாக நடைபெற்றது. அன்றயதினம் K. ஜீவா என்ற வாலிபர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றார் இச்செய்தியை பாண்டி ஊழியர் செங்கோலராயன் அறிவிக்கிறார்.

4. வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையை சேர்ந்த சகோதரி எப்சிபாய்க்கு ஒரு பெண்குழந்தையை கர்த்தர் கொடுத்தார் அதேபோல் சகோதரி சுப்புலெட்சுமிக்கும் ஒரு பெண் குழந்தையை கர்த்தர் கொடுத்தார் அவருக்கே மகிமை உண்டாவதாக.

★ ஜனவரி மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. மேரி எலிசபெத் கலைவாணி | வத்தலக்குண்டு |
| 2. ஜெபர்சன் ஜேக்கப் | ஐரேனிபுரம் |
| 3. மேரி | வத்தலக்குண்டு |

★ ஜனவரி மாத இதழின் விடைகள்:

| | |
|---|---|
| 1. பேதுரு மாற் 14:30 | 6. பூர்வத்தாருக்கு |
| 2 ஆகீஸ். தாவீதை 1சாமு 29:9 | 7. விபச்சாரஞ் |
| 3. பரிசுத்த ஆவியும் அப் 5:32 | 8. கிறிஸ்துவினுடைய |

4. உன் உடன்படிக்கையின்
இரத்தத்தினாலே சகரி 9:11 9. கர்த்தராலே
5. மிகுதியாயிருக்கும் மத்5:12 10. தம்முடைய வாயின்
சுவாசத்தினாலே

★ இம்மாத வேத அறிவுப் போட்டி!

1. கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு எப்படிப்பட்ட வாசனையாயிருக்கும்?

2. கேட்டுக்கேதுவான வேத புரட்டுக்களைத் தந்திரமாய் நுழையப் பண்ணுகிறவர்கள் யார்?

3. ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் என்ன செய்யப்படுவான்?

4. பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினாரா?

5. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி எவைகள் காக்கப்பட வேண்டும்?

6. நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள காத்திருக்க வேண்டுமா?

7. இயேசு கிறிஸ்து எங்கேயாவது சுகமளிக்கும் கூட்டங்கள் என்று கூவி சுகம் கொடுத்தாரா?

8. ஒரு கிறிஸ்தவனின் உள்ளம் வெள்ளையாக மாறவேண்டுமா? உடை வெள்ளையாக மாறவேண்டுமா?

9. பன்றிகளின் அருகே முத்துக்களைப் போடலாமா?

10. நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி எந்நாளில் உண்டாயிருக்கும்?

எமக்கு வந்த கடிதங்களில் சில

---

1. கிறிஸ்துவுக்குள் அன்பான ஊழியத்தில் வாஞ்சையுள்ள மகனுக்கு அம்மா வாழ்த்தி எழுதுவது, 23-1-96

கர்த்தருடைய பெரியகிருபையாலும், உங்களுடைய ஜெபத்தாலும் நான் சற்று சுகமாக இருக்கிறேன். ஒரு சில கேள்விகளுக்கு விடைகான முடியாமல் மனம் இளக்கரித்துப் போனபோதும் இரவிலே தூக்கம் வராதபடியால் 1 மணி முதல் ஏசாயாவிலிருந்து ஒவ்வொரு வசனமாகப் பார்த்துக் கண்டு பிடித்தேன் கண்கள் இருளடைந்து சரியாகப்பார்க்க முடியவில்லை இருப்பினும் விடா முயற்சியோடு 4 மணி நேரம் தேடி உடனே எழுதிவைத்து விட்டு சற்றுபடுத்தேன் உங்கள் ஊழியம் சிறந்துவிளங்க ஜெபிக்கின்றேன் என் உள்ளான வாழ்த்துக்கள். இப்படிக்கு

A. மேரி Rtd Tr வத்தலக்குண்டு

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு
வத்தலக்குண்டு-624202

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

MONTHLY MAGAZINE News Paper
WOR OF CHRIST: Regd. No. 84661-92.
Registerd No TN/DDL/19

PRINTED MATTER

To

128.D. RAMESH,
28A, Muthumari Street,
Nadar Colony,
Thiruchi Road, COVAI-18.

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu624202.
S. India

Edited and publised by B. Arjunan M.A., A.Bs , on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.